RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 156 | ஜூன்.13 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ரூ.134.83 கோடி மதிப்பீட்டில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம்: முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: ஜூன்.13-

டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகளைப் பெற்றுப் பயனடையுமாறு முதல்வர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: “தமிழ்நாட்டில் நெல் சாகுபடி, மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பிற்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் முக்கியப் பங்காற்றி வருகிறது. குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் குறுவை, கார் மற்றும் சொர்ணவாரிப் பருவங்களில் மேற்கொள்ளப்படும் நெல் சாகுபடியை ஊக்குவித்து, நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் 2026ம் ஆண்டில், 134.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் சராசரியாக 52.72 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களின் அனைத்துப் பகுதிகளிலும், கடலூர், திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும் நெற்பயிரே முதன்மையாக சாகுபடி செய்யப்படுகிறது. டெல்டா மாவட்டங்களில் ஆண்டுக்கு 20.65 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், குறுவைப் பருவத்தில் மட்டும் சராசரியாக 5.14 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில், ஆண்டுக்கு 32.07 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில், கார், குறுவை, சொர்ணவாரிப் பருவத்தில் மட்டும் சராசரியாக 5.48 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.




ஆண்டுதோறும் தஞ்சாவூர், நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, கடலூர் (சில பகுதி), திருச்சி (சில பகுதி), அரியலூர் (சில பகுதி) ஆகிய டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி செய்வதற்கு, மேட்டூர் அணை ஜூன் 12ம் நாளன்று திறப்பது வழக்கமாகும். இந்நிலையில், நடப்பு தென் மேற்குப் பருவத்தில் ‘எல்நினோ’ எனும் நிகழ்வால் மழை அளவு 90 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது தென் மேற்குப் பருவமழை தாமதமாகும் நிலையில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாகவே உள்ளது. இதனால் தற்போது மேட்டூர் அணையில் நீர்மட்டம் 79.56 அடி (நீர் இருப்பு: 41.52 டிஎம்சி) மட்டுமே உள்ளது. எனவே, இன்று (ஜூன் 12) மேட்டூர் அணையைத் திறப்பதற்கான சாத்தியக் கூறு இல்லாத நிலை உள்ளது.

இதனால், காவிரி டெல்டா மாவட்டங்களில் இயல்பாக நெல் சாகுபடி மேற்கொள்ளும் 5 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்வதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. எனினும், டெல்டா மாவட்டங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் (Filter Points) மூலம் 3.55 லட்சம் ஏக்கர் வரை சாகுபடி மேற்கொள்ள இயலும் என்பதாலும், டெல்டா அல்லாத மாவட்டங்களில் தற்போது மழைப் பொழிவு சீராக இல்லாத நிலையிலும் விவசாயிகள் தங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட கார், குறுவை, சொர்ணவாரிப் பருவத்தில் நெல் சாகுபடி செய்வதை ஊக்குவிக்கவும், நெல் உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகள் பயனடையும் வகையில் 2026ம் ஆண்டிற்கான குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என முதல்வர் விஜய் இன்று அறிவித்துள்ளார்.

இதன்படி, வடிமுனைக் குழாய்களைக் கொண்டு டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக 77.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும், டெல்டா அல்லாத மாவட்டங்களில் கார், குறுவை மற்றும் சொர்ணவாரி நெல் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக 57.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் என மொத்தம் 134.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில், நெல் இயந்திர நடவு, நேரடி நெல் விதைப்பிற்கான ஊக்கத்தொகை, உயிர் உரங்கள், நெல் நுண்ணூட்ட உரக்கலவை, விதை நெல் விநியோக மானியம் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட நெல் ரகங்களின் சான்று விதை உற்பத்திக்கான ஊக்கத் தொகை ஆகிய இனங்களுக்கு 134.83 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடாக டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களின் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் மூலம், இயந்திரமயமாக்கல் ஊக்குவிக்கப்படுவதுடன், நீர் மேலாண்மை மேம்படுத்தப்படும். தரமான விதைகள் மற்றும் தொழில் நுட்பங்கள் பயன்பாட்டின் மூலம் நெல் சாகுபடியின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுவதுடன், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தி, மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்த இத்திட்டம் உறுதுணையாக அமையும்.

மேலும், வேளாண் பொறியியல் துறை வாயிலாக டெல்டா மாவட்டங்களில் உள்ள 2,325 கி.மீ. நீளமுள்ள ”சி” மற்றும் ”டி” வாய்க்கால்கள் 10 கோடி ரூபாய் செலவில் தூர் வாரப்பட்டுள்ளன. மேலும், நீர்வளத்துறை மூலமாக 100 கோடி ரூபாய் செலவில் 4,971 கி.மீ. நீளமுள்ள ”ஏ” மற்றும் ”பி” வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டு தற்போது வரை 97 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளன.

மேலும், குறுவை சாகுபடிக்கு 10,714 மெட்ரிக் டன் நெல் விதைகள் மற்றும் 4.02 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தடையில்லா மும்முனை மின்சாரம் நாளொன்றுக்கு 18 மணி நேரம் வழங்கப்படும்.

எனவே, டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகளைப் பெற்றுப் பயனடையுமாறு முதல்வர் விஜய் கேட்டுக்கொண்டுள்ளார்” என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “நிதி ஆயோக் கூட்டத்தில் திமுக சாதனைகள் மீது தவெக ஸ்டிக்கர்” : உதயநிதி கண்டனம்

சென்னை, ஜூன்.13-

“நிதி ஆயோக் கூட்டத்தில் திமுக அரசின் சாதனைகளின் மீது முழுக்க முழுக்க ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது சோஃபா மாடல் அரசு” என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், “தேர்தல் பிரச்சாரத்தின் போது, தமிழ்நாடு ஏதோ படுகுழிக்குள் விழுந்தது போலவும், கடனில் தத்தளிப்பதாகவும் போலி கதைகளை (Fake Narratives) உருவாக்கிய இன்றைய முதல்வர், டெல்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் சாதனைகள் என்று பெரும் பட்டியலை வாசித்து இருக்கிறார்.

இந்தியாவிலேயே 2 ஆவது பெரிய பொருளாதாரமாக தமிழ்நாடு இருக்கிறது. இந்தியாவில் பணிக்குச் செல்லும் பெண்களில் 42 சதவிகிதம் மகளிர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். பெண் கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றில் முன்னேற்றம், மகளிர் சுய உதவி குழுக்களின் வளர்ச்சி என்று முதல்வர் பேசி இருக்கிறார்.

இவை எல்லாம் அவருடைய ஒரு மாத கால ‘சோஃபா மாடல்’ ஆட்சியில் நடந்த சாதனைகளா? அல்லது, 5 ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனையா? என்பதை முதல்வர் விளக்க வேண்டும்.

தேர்தலுக்கு முன்பு ‘நீட் மட்டும் தான் உலகமா?’ என்று கேட்டவர், இப்போது நீட் விலக்கு கேட்டு, அவர் பேசியதற்கு அவரே மறுப்பு கூறியிருக்கிறார். டெல்லி வரை சென்றவர், நிதி ஆயோக் கூட்டத்திலோ, அல்லது கர்நாடகாவில் ஆட்சி செய்யும் அவருடைய புதிய கூட்டணிக்கட்சியிடமோ மேகேதாட்டு பிரச்சினை பற்றி வாய் திறக்காமல், நமக்கெதுக்கு வம்பு என்று அமைதியாக திரும்பி இருக்கிறார்.

மொத்தத்தில், நிதி ஆயோக் கூட்டத்தில் நம் கழக அரசின் சாதனைகளின் மீது முழுக்க முழுக்க ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது சோஃபா மாடல் அரசு. பொய்களையும், அவதூறுகளையும் அள்ளி வீசி, மக்களை ஏமாற்றி, நீங்கள் பெற்றிருக்கும் போலி வெற்றி நீண்ட நாள் நிலைக்காது சி.எம் சார். உண்மை நிச்சயம் வெல்லும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜீனா அவர்கள் திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் உள்ள நீச்சல் குளத்தை ஆய்வு மேற்கொண்டார்.

## “5 ஆண்டுகளுக்குள் மிகச் சிறந்த மாவட்டமாக திருச்சி…” : அமைச்சர் ரமேஷ் உறுதி

திருச்சி: ஜூன்.13-

“இன்னும் 5 ஆண்டுகளுக்குள் திருச்சி மாவட்டம் தமிழகத்தின் மிகச் சிறந்த மாவட்டமாக தரம் உயர்த்தப்படும்” என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் எஸ்.ரமேஷ் தெரிவித்துள்ளார்.




திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் எஸ்.ரமேஷ் தலைமை வகித்தார். திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரத்திக் தாயள் முன்னிலை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில், திருச்சி மாவட்டத்தில் தற்போது பல்வேறு துறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு மற்றும் மக்கள் நல மேம்பாட்டுப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பணிகளின் தற்போதைய நிலை, அவற்றை விரைந்து முடிப்பதற்கான வழிமுறைகள் குறித்து அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும், பொது மக்களின் கோரிக்கைகளை விரைந்து பரிசீலித்து, திட்டங்களை தொய்வின்றி செயல்படுத்த வேண்டும் என்று கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழக சட்டப்பேரவைத் துணைத் தலைவர் எம்.ரவிசங்கர், மாநகர காவல் ஆணையர் என்.காமினி, எஸ்பி பிரவீன் உமேஷ் டோங்ரே, மாநகராட்சி ஆணையர் வீர் பிரதாப் சிங், எம்எல்ஏக்கள் நவல்பட்டு விஜி, ஆர்.கதிரவன், விக்னேஷ் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் கூறியது: “இந்த ஆய்வுக் கூட்டம் மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டது. மாவட்டத்தில் தற்போது செயல்பாட்டில் உள்ள திட்டங்களின் நிலை, தற்சமயம் நடந்து வரும் பல்வேறு துறை சார்ந்த பணிகள் மற்றும் எதிர்காலத்தில் மக்களுக்காகக் கொண்டு வரப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் பொது மக்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும் அதிகாரிகளிடம் எடுத்துரைத்து, அதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. தமிழக முதல்வர் மக்களுக்காகப் பல்வேறு சிறப்பான திட்டங்களைத் தீட்டி வருகிறார். இந்தத் திட்டங்கள் அனைத்தும் எவ்வித ஊழலோ, சுரண்டலோ இன்றி தங்கு தடையின்றி நேரடியாக மக்களைச் சென்றடைவதை உறுதி செய்வதே இந்த ஆய்வுக் கூட்டத்தின் முக்கிய நோக்கம்.

சுயநலத்துக்காக இல்லாமல், பொதுநல நோக்கோடு மட்டுமே மக்களின் உண்மையான தேவைகளை அறிந்து திட்டங்கள் செயல்படுத்தப்படும். மக்களின் கோரிக்கைகளுக்கும், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் உடனுக்குடன் தீர்வு காணும் வகையில், இனிவரும் காலங்களில் ஒவ்வொரு மாதமும் அனைத்துத் துறை அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்கும் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் கட்டாயம் நடைபெறும்.

மக்கள் பிரதிநிதிகள் மூலம் பெறப்படும் பொதுமக்களின் கருத்துகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும். இன்னும் 5 ஆண்டுகளுக்குள் திருச்சி மாவட்டம் தமிழகத்தின் மிகச் சிறந்த மாவட்டமாகத் தரம் உயர்த்தப்படும்” என்று அவர் கூறினார்.

## மேட்டூர் நீர் திறக்காமல் ரூ.134 கோடிக்கு ‘சிறப்பு தொகுப்பு’ என ஏமாற்றுவதா? : அரசுக்கு இபிஎஸ் கண்டனம்

**சென்னை, ஜூன்.13–**

“மேட்டூர் அணையில் இருந்து நீர்த் திறப்பு செய்யாமல், ரூ.134 கோடிக்கு சிறப்பு தொகுப்பு என்ற பெயரில் மற்றுமொரு ஏமாற்று அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டு உள்ளது” என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 அன்று திறக்கப்படும் மேட்டூர் அணை நீர், இவ்வாண்டு இன்றைய தினம் திறக்கப்படாததால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் ஆளாக்கியுள்ளது. குறுவை சாகுபடி மேட்டூர் அணையில் இருந்து காவிரி நீர்த் திறப்பை பெரிதும் நம்பி இருப்பதால், இந்த நீர் வெளியீடு என்பது மிகவும் முக்கியமானது.

ஏற்கெனவே இந்த அரசு, விவசாயப் பயிர்க் கடன் என்ற பெயரில் 10,000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்டு இருக்கும் கடன் தொகைகளை சொன்னபடி தள்ளுபடி செய்யாமல், கடுகளவுக் கடனை மட்டும் அடைப்பதாக கூறி விவசாயிகளை ஏமாற்றி, அவர்களை போராட்டக் களத்திற்கு தள்ளிவிட்டது. தற்போது நீர்த் திறப்பு செய்யாமல், ரூ.134 கோடிக்கு சிறப்பு தொகுப்பு என்ற பெயரில் மற்றுமொரு ஏமாற்று அறிவிப்பை வெளியிட்டு உள்ளது.

மும்முனை மின்சாரம் ஏற்கனவே விவசாயிகளுக்கு 24 மணி நேரம் அஇஅதிமுக அரசின் அறிவிப்பின்படி வழங்கப்பட்டு வருகிறது. அதை தற்போது 18 மணி நேரமாக குறைத்து அறிவித்துள்ளது அரசு.

ஏற்கனவே அறிவிக்கப்படாத மின்வெட்டால் மாநிலம் முழுக்க மின்சாரம் இல்லாததால் பம்பு செட்டுகள் இயக்க முடியாத நிலை வேறு உள்ளது. இந்நிலையில், விவசாயிகளின் வலிகளை, வேதனைகளை கொஞ்சம் கூட புரியாமல் இன்றைய பொய்க்கால் குதிரை அரசு ஒரு வெற்று ஏமாற்று அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

விவசாயிகள் வாழ்வாதாரம் சம்மந்தப்பட்ட விஷயமான இதன் தீவிரத்தை உணர்ந்து, மேட்டூர் அணையில் இருந்து நீர் திறந்து கடைமடை வரை சென்றடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என இந்த அரசை வலியுறுத்துகிறோம்,” என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.



■ நீலகிரி மாவட்டம் உதகை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை பாஜக தேசிய துணை தலைவர் அப்துல்லா குட்டி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார் உதகை சட்டமன்ற உறுப்பினர் போஜராஜ் மற்றும் பாஜக நிர்வாகிகள் தொண்டர்கள் உடனிருந்தனர்.

# நீலகிரி மாவட்டத்தில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிபடை துவக்கம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கொடியசைத்து துவக்கி வைத்தார்

உதகை, ஜூன்.13-

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையை முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார். தனது நேரடிக் கண்காணிப்பில் செயல்படும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையை, சென்னை எழும்பூர் ராஜரத்தினம் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் விஜய். தனது நேரடிக் கண்காணிப்பில் செயல்படும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படையை, சென்னை எழும்பூர் ராஜரத்தினம் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார்.

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் இலட்சினையை அறிமுகம் செய்த முதலமைச்சர், திட்டத்தின் முன்னோட்ட வீடியோவையும் வெளியிட்டார்.

பின்னர், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை திட்டத்தின் ரோந்து வாகனங்களின் சேவையை தொடங்கி வைத்த முதலமைச்சர், காவலர்கள் இருந்த வாகனத்தையும் இயக்கிச் சென்றார்.இதன் தொடர்ச்சியாக நீலகிரி மாவட்டம் உதகையில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S. பிருந்தா, சிங்கப்பெண் சிறப்பு காவல் படை ஆரம்பித்து கொடியசைத்து துவக்கி வைத்தார்.







இந்த நிகழ்வில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மணிகண்டன், சௌந்தர்ராஜன் மற்றும் நகர காவல் துணை கண்காணிப்பாளர் கோபால கிருஷ்ணன், உதகை நகர காவல் ஆய்வாளர். அன்பரசு சிறப்பு பிரிவு உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த சிங்கப்பெண் சிறப்பு படையில் இரண்டு சார்பு ஆய்வாளர்கள், நான்கு பெண்காவலர்கள் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது இவர்கள் பெண்கள் அதிகம் கூடும் இடங்கள், பள்ளிகள், கல்லூரிகள் , சுற்றுலா தளங்கள் ஆகிய இடங்களில் காலை ஏழு மணிமுதல் இரவு பன்னிரண்டு மணிவரை ரோந்து பணியைமேற்கொள்வர்கள் எனவும் மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# நீலகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் SSC ஒருங்கிணைந்த பட்டதாரி நிலை (CGL) தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள்

நீலகிரி, ஜூன்.13-

பணியாளர் தேர்வு ஆணையம் (Staff Selection Commission SSC) சார்பில் (Combined Graduate Level Examination CGL) 2026 அறிவிப்பு(F.எண். HQ.C11018/1/2026-C-1,நாள்:21.05.2026)வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் குழு "B" மற்றும் குழு "C" பணியிடங்களுக்காக மொத்தம் 12,256 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

ஏதேனும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனத்தில் பட்டப்படிப்பு (Graduation Degree) முடித்தவர்கள் இந்த தேர்விற்கு விண்ணப்பிக்கலாம். சில பணியிடங்களுக்கு குறிப்பிட்ட பாடங்கள் (புள்ளியியல், வணிகவியல்) கட்டாயமாகும். விண்ணப்பதாரர்களின் வயது 01.08.2026 தேதியின்படி 18 முதல் 32 வயதுக்குள் இருக்க வேண்டும். SC/ST வகையினருக்கு 5 ஆண்டுகளும், OBC வகையினருக்கு 3 ஆண்டுகளும் வயது தளர்வு வழங்கப்படும்.

தேர்வு கணினி வழித் தேர்வு (CBT) மூலம் இரண்டு நிலைகளில் நடத்தப்படும். Tier-I தேர்வு ஆகஸ்ட் செப்டம்பர் 2026 மற்றும் Tier-II தேர்வு டிசம்பர் 2026 இல் நடைபெறவுள்ளது. மாத ஊதியம் ரூ. 25,500 முதல் ரூ.1,51,100 வரை வழங்கப்படும்.

ஆன்லைன் விண்ணப்ப பதிவு 21.05.2026 முதல் தொடங்கியுள்ளது. விண்ணப்பிக்க கடைசி தேதி 22.06.2026 ஆகும். விண்ணப்பக் கட்டணம் ரூ. 100/ ஆகும் (பெண்கள், SC/ST வகையினர் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை). கட்டணம் செலுத்த கடைசி தேதி 23.06.2026. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பம் திருத்தும் வாய்ப்பு 29.06.2026 முதல் 01.07.2026 வரை வழங்கப்படும். அனைத்து விண்ணப்பங்களும் இணைய வழியில் மட்டுமே www.ssc.gov.in ஏற்கப்படும்.

மேற்கண்ட SSC CGL (Combined Graduate Level) தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பமுள்ள நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியானவர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரிலோ அல்லது 04232444004 / 7200019666 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, தெரிவித்துள்ளார்.



# பழனி மலைமீது போகர் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது

## பச்சை மரகத லிங்கத்திற்கு நடைபெற்ற அபிஷேக நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்

பழனி, ஜூன்.13-

பழனி முருகன் கோயில் மலை மீதுள்ள நவபாஷாண முருகன் சிலையை உருவாக்கியவர் சித்தர் போகர். போகரின் ஜீவசமாதி பழனி மலைமீது வெளிப் பிரகாரத்தில் அமைந்துள்ளது. பழனி முருகனை தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் சித்தர் போகரையும் வணங்கி விட்டுச் செல்கின்றனர். சித்தர் போகரின் ஜெயந்தி விழா ஆண்டுதோறும் மலை மீது உள்ள போகரின் ஜீவசமாதி விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. போகர் ஜெயந்தி தினமான இன்று சித்தர் போகர் மற்றும் சித்தர் புலிபாணியால் வணங்கப்பட்டுவந்த பழமையான பச்சை மரகத லிங்கம் மற்றும் புவனேஸ்வரி அம்மன் சிலைகள் வெளியே எடுத்து வரப்பட்டு பக்தர்கள் முன்னிலையில் அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றது . பச்சை மரகதலிங்கம் மற்றும் புவனேஸ்வரி அம்மனுக்கு பால், பஞ்சாமிர்தம், தேன், இளநீர், பழ வகைகள் உட்பட 14 வகையான பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பழனி ஆதினம் ஸ்ரீமத் போகர் சிவானந்த புலிப்பாணி பாத்திர சாமிகள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.





# தாம்பரத்தில் இளமதி தாரா மஞ்சள் நீராட்டு விழாவில் மாவட்டச் செயலாளர் அனகை முருகேசன் பங்கேற்பு

தாம்பரம், ஜுன்.13-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் கேட்.எம்.தர்மா தலைமையில், தாம்பரம் தெற்கு பகுதி 63வது மேற்கு வட்ட செயலாளர் தேன் என்கின்ற லட்சுமிகாந்த் மற்றும் தெற்கு பகுதி மகளிர் அணி துணைச் செயலாளர் ரம்யா ஆகியோரின் மகள் இளமதி தாராவின் மஞ்சள் நீராட்டு விழா கிழக்கு தாம்பரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட கழகச் செயலாளர் அனகை முருகேசன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மகளை வாழ்த்தினார். மேலும் மாவட்ட துணைச் செயலாளர் மா.செழியன், மாவட்ட நிர்வாகி கலா ஆறுமுகம், தெற்கு பகுதி துணைச் செயலாளர் டி எழமலை, ஐ.கே.தர்மா, தமிழரசி, கேப்டன் மன்றம் செயலாளர் நெரும்புர் ராஜேந்திரன் வட்ட கழகச் செயலாளர்கள் எம். இளங்கோ, கன்னியப்பன், குமார், ராசி மகேந்திரன், உள்ளிட்ட பல்வேறு கழக நிர்வாகிகள், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர்.

விழாவில் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெற்றதுடன், கலந்து கொண்ட அனைவருக்கும் விருந்தும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி மகிழ்ச்சிகரமான சூழலில் நடைபெற்றது.



■ கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில், தொழிலாளர் நலத்துறை சார்பாக, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு, விழிப்புணர்வு பேரணி மற்றும் கையெழுத்து இயக்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன், துணை ஆட்சியர் (பயிற்சி) சாய் சைதன்யா ஜாதவ், தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர்கள் ராஜசேகரன் (அமலாக்கம்), மாதேஸ்வரன் (சமூக பாதுகாப்பு திட்டம்), தாசரதி (சமரசம்) உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்போம்: கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரியில் உறுதிமொழி ஏற்பு

கிருஷ்ணகிரி, ஜூன்.13-

உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் வெள்ளிக்கிழமை குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

மருத்துவக் கண்காணிப்பாளர் மருத்துவர் பி. சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 14 வயதிற் குட்பட்ட குழந்தைகளை எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்தாமல், அவர்களின் கல்வியை ஊக்குவிப்பதுடன், குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலுமாக ஒழிக்க சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த உறுதிமொழி ஏற்கப்பட்டது.

நிகழ்ச்சியில் துணை முதல்வர் மருத்துவர் சாத்விகா, உள்ளிருப்பு மருத்துவ அலுவலர்கள் மருத்துவர் செல்வராஜ், மருத்துவர் மது ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதவி உள்ளிருப்பு மருத்துவ அலுவலர்கள் மருத்துவர் ரோமுள் தயான் ராஜா, மருத்துவர் தினேஷ், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், நிர்வாக அலுவலர்கள், செவிலியர் கண்காணிப்பாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றனர்.

தமிழ்நாட்டை குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது.

# நெடுஞ்சாலை ஓரங்களில் குப்பை கொட்டி எரிப்பு: பொதுமக்கள் அவதி மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க கோரிக்கை

கிருஷ்ணகிரி, ஜூன்.13-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட சந்தாபுரம் ஊராட்சியில், வீட்டு வசதி வாரியம், நரிமேடு, சரஸ்வதி கார்டன் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் 300க்கும் மேற்பட்ட குடும்பங்களின் வீட்டு குப்பைகளை தினமும் 6க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் சேகரித்து வருகின்றனர்.

சேகரிக்கப்படும் குப்பைகள் வழக்கமாக அகரம் சாலையில் ஓடு பேக்டரி எதிரே அமைந்துள்ள குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு தரம் பிரித்து அகற்றப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக அந்த குப்பை கிடங்கை சில தனியார் நபர்கள் ஆக்கிரமித்து பூட்டி வைத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.





இதன் காரணமாக, தூய்மை பணியாளர்கள் சேகரிக்கும் குப்பைகளை காவேரிப்பட்டினம் புதிய வீட்டு வசதி வாரியம் அருகே நெடுஞ்சாலை ஓரத்திலும், சரஸ்வதி கார்டன் பகுதியில் பெட்ரோல் பங்க் எதிரே சாலை ஓரத்திலும் கொட்டி தீ வைத்து எரித்து வருவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

குப்பைகள் எரிக்கப்படுவதால் அதிகளவில் புகை வெளியேறி, அந்த வழியாக செல்லும் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். குறிப்பாக காலை நேரங்களில் பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலகங்களுக்கு செல்லும் பொதுமக்கள் மூச்சுத்திணறல் உள்ளிட்ட பாதிப்புகளை சந்திப்பதாக கூறப்படுகிறது.

மேலும், அடர்ந்த புகை காரணமாக சாலையில் பார்வைத்திறன் குறைவதால் வாகன ஓட்டிகளுக்கு விபத்து அபாயமும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து நெடுஞ் சாலைத்துறை அதிகாரிகள் பலமுறை சம்பந்தப்பட்ட ஊராட்சி தலைவர் மற்றும் செயலாளருக்கு தகவல் தெரிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

எனவே, குப்பை கிடங்கு ஆக்கிரமிப்பு குறித்து விசாரணை நடத்தி, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலை ஓரங்களில் குப்பை கொட்டி எரிக்கும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க மாவட்ட நிர்வாகம் போர்க்கால அடிப்படையில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுவதற்கான உறுதிமொழி மேயர் (பொ) / துணை மேயர்தி.நாகராஜன் , ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் அனைத்து பணியாளர்களும் ஏற்றுக் கொண்டனர் அருகில் துணை ஆணையாளர் இராஜாராம் , உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் , மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு குழந்தை தொழிலாளர் இல்லாத மாநிலத்தை உருவாக்குவோம் என்ற விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ் இ.ஆ.ப., தலைமையில் கையெழுத்திட்டு விழிப்புணர்வு வாகனத்தை துவக்கி வைத்தார்.தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.






■ திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில், வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு விழா, வருவாய்த் தீர்வாய அலுவலர் / மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பி.சையத் பாரூக் பாஷா, முன்னிலையில் (11.06.2026) அன்று நடைபெற்றது. உடன் வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் (பொ) தணிகாசலம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், வட்டாட்சியர் சுதாகர், வட்டாட்சியர் (ச.பா.தி) பாரதி, தலைமையிட வட்டாட்சியர் ஹரிதாஸ், வருவாய்த் தீர்வாய மேலாளர் / வட்டாட்சியர் திருமலை, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், விவசாய சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ மதுரை மாவட்டம், ஆணையூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டடங்கள் கட்டுவதற்கான பூமி பூஜை மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ், இ.ஆ.ப., தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. "நம்ம ஊரு நம்ம ஸ்கூல்" திட்டத்தின் கீழ், திருநகரைச் சேர்ந்த சிங்கப்பூர்வாழ் தமிழரும் Info-Tech Systems நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலருமான எஸ்.எஸ். திலீப் பாபு ரம்யா ஆகியோர் தங்களது தனிநபர் பங்களிப்பின் மூலம் இப்புதிய வகுப்பறை கட்டடங்கள் அமைப்பதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளனர். இப்பள்ளியில் 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை 336 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.

# தொடர் மின்வெட்டால் விவசாயம் பாதிப்பு: அரசு உடனடி நடவடிக்கை எடுக்க தேமுதிக வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.13-
"விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட கடன் தள்ளுபடி முழுமையாக செயல்படுத்தப்படாதது ஒரு புறம்; மின்வெட்டால் பாதிக்கப்படுவது மறுபுறம் என்று விவசாயிகளின் நிலைமை பரிதாபமாக மாறியுள்ளது. எனவே, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: கடலூர் மாவட்டம், விருத்தாசலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தொடர்ச்சியாக நிலவி வரும் மின்வெட்டு விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு போதிய நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக பயிர்கள் வாடியதால் விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பையும் வேதனையையும் சந்தித்து வருகின்றனர்.

விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட கடன் தள்ளுபடி முழுமையாக செயல்படுத்தப்படாதது ஒரு புறம்; மின்வெட்டால் பாதிக்கப்படுவது மறுபுறம். "உரலுக்கு ஒரு விவசாயிகள் பக்கம் இடி மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி" என்பது போல் விவசாயிகளின் நிலைமை பரிதாபமாக மாறியுள்ளது. எனவே, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

தமிழகத்தில் 14.23 லட்சம் விவசாயிகள் பயன் பெறும் விதமாக பயிர்க் கடனில் ரூ. 2,044 கோடியை தள்ளுபடி செய்திருக்கிறது தவெக அரசு. ஆனால், தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி விஜய் செய்யவில்லையே என விவசாயிகளும் விவசாய சங்கங்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்தநிலையில், தொடர்ச்சியாக நிலவி வரும் மின்வெட்டு விவசாயிகள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு போதிய நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக பொருளாதார இழப்பை எதிர்கொண்டுள்ளனர்.

# லஞ்ச ஒழிப்புத் துறை புதிய மனு: முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு சிக்கல்?

**சென்னை, ஜூன்.13–**
முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிரான லஞ்ச வழக்கை முடித்து வைப்பதாக தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையை திரும்பப் பெற அனுமதிக் கோரி லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



கடந்த 2011 முதல் 2016 வரையிலான அதிமுக ஆட்சி காலத்தில், வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்த வைத்திலிங்கம், சென்னை பெருங்களத்தூர் ஸ்ரீராம் ப்ராப்பர்ட்டீஸ் அடுக்குமாடி கட்டிடத்திற்கு திட்ட அனுமதி அளிக்க 28 கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக அறப்போர் இயக்கம் சார்பில் கடந்த 2022ஆம் ஆண்டு லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளிக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகள் தாமதத்திற்கு பிறகு, இந்தப் புகாரின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் லஞ்ச ஒழிப்புத் துறை, வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கின் அடிப்படையில் அமலாக்கப் பிரிவும் வழக்குப் பதிவு செய்திருந்தது. இந்த வழக்கு சென்னை அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், கடந்த ஜனவரி மாதம் திமுகவில் இணைந்தார். இதைத் தொடர்ந்து, வைத் திலிங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு போதுமான ஆதாரங்கள் இல்லை என்பதால், வழக்கை முடித்து வைத்து லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் முந்தைய ஆட்சியில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அறப்போர் இயக்கம், அமலாக்கத் துறை தரப்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், தற்போது லஞ்ச ஒழிப்புத் துறை, முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்துக்கு எதிரான வழக்கை மீண்டும் விசாரிக்க இருப்பதாகக் கூறி மனு தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்குகள் அனைத்தும், சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன் விசாரணைக்கு வந்தன.

அப்போது, வழக்கை முடித்து வைக்க எதிர்ப்பு தெரிவித்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு வைத்திலிங்கம் தரப்பில், இந்த வழக்கிற்கும் அமலாக்கத் துறைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிர்ப்பு தெரிவித்து மனு தாக்கல் செய்ய அமலாக்கத் துறைக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. வழக்கு முடித்து வைப்பதாக லஞ்ச ஒழிப்புத் துறை தாக்கல் செய்த அறிக்கையை தங்களுக்கு வழங்க வேண்டுமென மனு தாக்கல் செய்துள்ளதாக அறப்போர் இயக்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, அமலாக்கத் துறையின் மனு விசாரணைக்கு உகந்ததா, இல்லையா என்பது குறித்து முதலில் ஆய்வு செய்யப்படும் என தெரிவித்த நீதிபதி, அனைத்து மனுக்களின் மீதான விசாரணையை ஜூன் மாதம் 29ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.






# குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி

தேனி, ஜூன்.13-
தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.சினேஹா ப்ரியா தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை ஒருபோதும் எவ்வித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்குச் செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், தமிழ்நாட்டை குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமாற உறுதி அளிக்கிறேன். என்று அனைத்து காவல் நிலையங்களிலும் குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர்..

# பெண்ணிடம் அத்துமீறிய த.வெ.க. நிர்வாகி: அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஜூன்.13-
கணவனை இழந்த பெண் ஒருவரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஆலந்தூர் வடக்கு பகுதி தவெக செயலாளர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ள செய்தி அதிர்ச்சி அளிக்கிறது என்று அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார்.



பெண்களின் பாதுகாப்பை குறித்து முதலமைச்சர் விஜயின் வாக்குறுதிக்கு நேர்மாறாக உண்மை நிலை இருப்பது மிகுந்த ஏமாற்றமளிக்கிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் எதுவும் குறையவில்லை. இது போன்ற கடுமையான குற்றங்களில் ஈடுபடும் தைரியம், இவர்களுக்கு எங்கிருந்து வருகிறது என்று அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார். சமூக விரோதச் செயல்பாடுகளுக்கு, அரசியல் அடையாளம் பாதுகாப்பாக இருக் கக்கூடாது என்பதை, முதலமைச்சர் உறுதி செய்ய வேண்டும். குற்றவாளி மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார் .

# தமிழ்நாட்டில் காலியாக உள்ள 5 தொகுதிகளுக்கு ஆகஸ்டில் இடைத்தேர்தல்? முன்னேற்பாடு பணிகள் தீவிரம்

சென்னை, ஜூன்.13-
தமிழ்நாட்டில் காலியாக உள்ள 5 தொகுதிகளுக்கு ஆகஸ்ட் மாதத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற உள்ளதாக தேர்தலில் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் நடைபெற்ற 17வது சட்டப்பேரவை தேர்தலில் த.வெ.க. அதிக தொகுதிகளில் வெற்றி பெற்றது. எனினும், தனிப்பெரும்பான்மைக்கு தேவையான இடங்கள் கிடைக்காததால், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவற்றின் ஆதரவுடன் த.வெ.க. ஆட்சி அமைத்தது. தொடர்ந்து, விஜய் முதலமைச்சராக பதவியேற்றார்.

திருச்சி கிழக்கு மற்றும் பெரம்பூர் ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த விஜய், பின்னர் திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, அ.தி.மு.க.வை சேர்ந்த எஸ்.ஜெயகுமார், மரகதம் குமரவேல், பி.சத்யபாமா, இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களது சட்டப்பேரவை உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தனர்.

இதன் காரணமாக திருச்சி கிழக்கு, பெருந்துறை, மதுராந்தகம், தாராபுரம் மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகள் காலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த தொகுதிகளுக்கு வரும் ஆகஸ்ட் மாதத்தில் இடைத்தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாக தேர்தல் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. இதற்கான முன்னேற்பாட்டு பணிகள் ஆட்சியர் தலைமையில் தீவிரமாக நடந்து வருகிறது.

# "தவெக பெண் தொண்டர் பாலியல் வன்கொடுமை வழக்கில் ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏவை விசாரிக்காதது ஏன்?" - கீதா ஜீவன்

**தூத்துக்குடி, ஜூன்.13–**
தமிழகத்தில் நடைபெறும் ரீல்ஸ் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது என முன்னாள் அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான பி.கீதாஜீவன் தெரிவித்தார்.



தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி: தமிழக முதல்வர் தொடங்கி வைத்த சிங்கப்பெண் பாதுகாப்பு படை என்பது முந்தைய திமுக ஆட்சியில் சிறப்பாக செயல்பட்ட பிங்க் ரோந்து காவல் பிரிவு தான். அதன் பெயரை மாற்றி தற்போது தொடங்கி வைத்துள்ளனர்.

பெண்கள் பாதுகாப்பு குறித்து பேசும் முதல்வர் காதுகளுக்கு, ஸ்ரீவைகுண்டத்தை சேர்ந்த அவரது கட்சி பெண் தொண்டர் கடந்த 15 நாட்களாக கதறி வருவது கேட்கவில்லையா? கட்சி நிர்வாகிகளே தன்னை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக அந்த பெண் பொதுவெளியில் பகிரங்கமாக தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஸ்ரீவைகுண்டம் தவெக எம்எல்ஏ பெயரை அந்த பெண் குறிப்பிட்டும், அவரிடம் எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை.

ஆனால், சினிமாவுக்கு முன்னோட்டமாக ஆடியோ வெளியீடு போல ஒரு விழாவை நடத்தியிருக்கிறார்கள். தமிழகத்தில் தவெக ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து அக்கட்சியினர் தொடர்ந்து பொய் செய்திகளை சமூக வலைதளங்களில் பரப்பி வருகின்றனர்.

குறிப்பாக திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தான் நடந்தது போல பரப்புகின்றனர். தமிழக முதல்வர் தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கம் குறித்து இப்போது பேசுகிறார்.

இதன் மூலம் பொறுப்பில் இருந்து கைநழுவ நினைக்கிறாரா? சென்னை சிறுமி கொலை, ஸ்ரீவைகுண்டம் பெண் பாலியல் வன்கொடுமை சம்பவங்களுக்கு இந்த அரசு பொறுப்பேற்க வேண்டும். ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏவிடம் உரிய விசாரணை நடத்த வேண்டும்.

தமிழகத்தில் தவெகவினர் மிரட்டல், கட்டாய வசூல் போன்ற அடாவடி செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆட்சியில் அமைச்சர்களின் ஆய்வுக் கூட்டம் தொடங்கி அனைத்தும் ரீல்ஸ் மயமாகி விட்டது. சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் அதிகரித்துவிட்டன.

தமிழகத்தில் மின் தட்டுப்பாட்டுக்கு நிர்வாக சீர்கேடு தான் காரணம். ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் லாட்டரி மீண்டும் நடைமுறைக்கு வந்துவிடுவோம் என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

அப்போது திமுக மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மகளிரணி மாவட்ட அமைப்பாளர் கவிதா தேவி, மாநகர அமைப்பாளர் ஜெயகனி, தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட அமைப்பாளர் அபிராமிநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திருப்பூர் மாவட்ட நலச்சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.சு.துறைமுருகன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ் மற்றும் திருப்பூர் மாவட்ட நலச்சங்க நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.



■ இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் ந.ப்ரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி குழந்தை தொழிலாளர் உறுதிமொழியை அனைத்துத் துறை அரசு அலுவலர்களும், பணியாளர்களும் எடுத்துக் கொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சி.பேபி இந்திரா, உதவி ஆணையர் தொழிலாளர் நலத்துறை தாமரை மணாலன், துணை ஆட்சியர்கள் த கீதாலட்சுமி, மீனா, அறிவுடை நம்பி, பூமா, வட்டாட்சியர் , ஜெயக்குமார், தொழிலாளர் நல ஆய்வாளர்கள் ராஜகோபால், தட்சிணாமூர்த்தி மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் உள்ளனர்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்ட நலச்சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனைக்கூட்டம்

திருப்பூர், ஜூன்.13-

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திருப்பூர் மாவட்ட நலச்சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத்தில் கல்வி மேம்பாடு, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவம், சுற்றுச்சூழல், நீர் மேலாண்மை, சமூக நலன், மகளிர் மேம்பாடு, இளைஞர் நலன், விளையாட்டு, வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி, பேரிடர் மேலாண்மை அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவன கட்டட பராமரிப்பு பணிகள், பொருளாதார ரீதியாக பின்தங்கிய, திறமையுள்ள மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர நிதியுதவி செய்தல், பள்ளி இடைநின்ற குழந்தைகளைக் கண்டறிந்து மீண்டும் கல்வியைத் தொடரச் செய்தல், கற்றலில் தடுமாறும் குழந்தைகள், கற்றல் குறைபாடுடைய குழந்தைகள், மாற்றுத்திறனாளி குழந்தைகள் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும்



உதவுதல் மற்றும் மாணவர்களின் உளவியல் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல், நேர்மறை நடத்தை மாற்றத்திற்கான முன்னெடுப்புகளை எடுத்தல் மற்றும் ஆளுமை வளர்ச்சிப் பணி மேற்கொள்ளல். மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்க உதவுதல் மற்றும் ஏழை எளிய மக்களுக்கான மருத்துவ சிகிச்சைச் செலவுகளுக்கு உதவுதல். மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களைப் புனரமைத்தல், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த மழைநீர் சேகரிப்புத் திட்டங்களை முன்னெடுத்தல் மற்றும் மரம் நடுதல் போன்ற சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல். ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு காப்பகங்களுக்கு உதவுதல். பெண்களுக்கு சுயதொழில் தொடங்கத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல். விவசாயிகளுக்கு நவீன விவசாய நுட்பங்கள் மற்றும் இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கிராமப்புறங்களில் பொதுப் பயன்பாட்டிற்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். பேரிடர் மேலாண்மை: இயற்கைச் சீற்றங்கள், பெருந்தொற்று காலங்கள் அல்லது அவசர காலங்களில் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பொதுமக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுதல். அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பள்ளிகள், கல்லூரிகள், மாணவ மாணவியர் விடுதிகள், ஆதரவற்றோர் விடுதிகள் மற்றும் பல்வேறு அரசு துறைகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் மேலும், மலைவாழ் கிராமங்களில் சாலை வசதி, குடிநீர்வசதி, குடியிருப்பு வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் சமூக பங்களிப்பு நிறுவனங்களுடன் இணைந்து மாவட்ட நிர்வாகம் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில் திருப்பூர் மாவட்ட நலச்சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், திருப்பூர் மாவட்ட நலச்சங்கம் சார்பில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் குறித்தும், நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டப்பணிகள் குறித்தும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தெலீழில் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு நிதி விபரங்கள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தெரிவித்தார்கள். தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட நலச்சங்கத்தின் புதிய இணையதளத்தினை tir-uppurwelfaresociety.org துவக்கி வைத்து, இந்த இணையதளம் வாயிலாக தெலீழில் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் பதிவு செய்து பங்களிப்பு நிதி வழங்கிட கேட்டுக் கொண்டார்கள் இக்கூட்டத்தில், மாநகராட்சி ஆணையாளர் .எம்.பி. அமித் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் க.சங்கமித்திரை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)து. சு.துரைமுருகன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ் மற்றும் திருப்பூர் மாவட்ட நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வருவாய் கோட்டாட்சியர்**
**சிவகங்கை**
**ஓ. மு. அ 3/1002/2025-6**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், 375 அதப்படக்கி கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு. ஆறுமுகம் த / பெ. கருப்பன் என்பவரின் ஐயா ஆறுமுகம் என்பவர் கடந்த 1955 அன்று சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் பாகனேரி பஞ்சாயத்து பாகனேரி கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிட ப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது..

மனுதாரர்
திரு.ஆறுமுகம்
375, அதப்படக்கி கிராமம் காளையார் கோவில் வட்டம் சிவகங்கை மாவட்டம்
எதிர்மனு
1. வட்டாட்சியர்
காளையார் கோவில்

**வருவாய் கோட்டாட்சியர்**
**சிவகங்கை**
**ஓ. மு. அ 3/1002/2025-7**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், 375 அதப்படக்கி கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு. ஆறுமுகம் த / பெ. கருப்பன் என்பவரின் பெரியப்பா ராக்கான என்பவர் கடந்த 1972 அன்று சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டம் பாகனேரி பஞ்சாயத்து பாகனேரி கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்து ப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மனுதாரர்
திரு.ஆறுமுகம்
375, அதப்படக்கி கிராமம் காளையார் கோவில் வட்டம் சிவகங்கை மாவட்டம்
எதிர்மனு
1. வட்டாட்சியர்
காளையார் கோவில்

# நீண்டகாலமாக மின்சார வசதி இல்லாமல் இருளில் சிரமப்பட்டு வந்த இருளர் சமூக குடும்பங்களுக்கு மின் இணைப்பு

திருப்பத்தூர், ஜூன்.13-

திருப்பத்தூர் மாவட்டம், ஏகே மோட்டூர் ஊராட்சியில் வசித்து வரும் இருளர் சமூக மக்களுக்கு நீண்ட காலமாக மின்சார வசதி கிடைக்காமல் இருந்து வந்தது. இதனால் இப்பகுதி மக்கள் தங்களின் அன்றாடத் தேவைகளுக்கும், மாணவர்களின் கல்வி பயிலும் சூழலுக்கும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். பொதுமக்களின் இந்த நீண்டகால அத்தியாவசியக் கோரிக்கையை தொடர்ந்து, அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் தங்குதடையின்றி கிடைக்கும் வகையில் புதிய மின்கம்பங்கள் அமைக்கும் பணிகள் இன்று தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.



இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மின்மயமாக்கல் பணிகள் ஏகே மோட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் பு.வேலு தலைமையில் நடைபெற்றது. புதிய மின்கம்பங்களை நடுவதற்கான குழிகள் தோண்டப்பட்டு, ஜேசிபி இயந்திரம் மற்றும் டிராக்டர்கள் உதவியுடன் மின்கம்பங்கள் நிலைநிறுத்தப்படும் பணிகளை ஊராட்சி மன்றத் தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பொதுமக்களின் நீண்டகாலக் குறை விரைவில் தீர வேண்டும் என்பதால், பணிகளை எவ்வித தொய்வுமின்றி விரைவாக நிறைவு செய்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டார்.

இப்பணியின் போது வார்டு உறுப்பினர் சுகுமார், மின்சார வாரிய ஊழியர்கள், கிராம பொதுமக்கள் மற்றும் இருளர் சமூகத்தைச் சேர்ந்த ஏராளமானோர் நேரில் கலந்து கொண்டு பணிகளை ஒருங்கிணைத்து, ஒருமித்த கூட்டு முயற்சியாக இப்பணியை வெற்றிகரமாகத் தொடங்கி வைத்தனர்.

நீண்டகாலமாக மின்சார வசதி இல்லாமல் இருளில் சிரமப்பட்டு வந்த இருளர் சமூக குடும்பங்கள், இந்த துரித நடவடிக்கையின் மூலம் விரைவில் தங்களது வீடுகளில் மின்சார இணைப்பு பெற்று பிரகாசமான வாழ்வை அடைய உள்ளனர். இந்த சிறப்பான மற்றும் நெகிழ்ச்சியான நடவடிக்கைக்கு கிராம பொதுமக்கள் தங்களது நெஞ்சார்ந்த மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர்.



# ஊத்துக்கோட்டையில் ஜமாபந்தி நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சியர் நலதிட்ட உதவி மற்றும் இலவச வீட்டுமனை பட்டா வழங்கினார்

திருவள்ளூர், ஜூன்.13-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் 1435 பசலி தீர்வாயம் 2026ம் ஆண்டு ஜமாபந்தி கடந்த 02.06.2026 தொடங்கி 7நாட்கள் நடைபெற்று 11.06.2026 அன்று நிறைவடைந்தது இந்த ஜமாபந்தியில் மொத்தம் 648 மனுக்கள் பெறப்பட்டு 220 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன இதில் 30 மனுக்கள் தள்ளுபடி செய்து 398 மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்டன

இதில் 30 நபர்களுக்கு குடும்ப அட்டையும் 150க்கும் மேற்பட்டோருக்கு இலவச வீட்டுமனை பட்டாவும் மற்றும் விவசாயிகளுக்கு உரம் மற்றும் உபகரணங்கள் வழங்கினர் மேலும் 10க்கும் மேற்பட்டோருக்கு 30 ஆயிரத்திற்கான நிவாரண நிதி காசோலைகளை மாவட்ட ஆட்சியர் கலந்து கொண்டு பயணாளிகளுக்கு வழங்கினார் இந்நிகழ்வில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் வட்டாட்சியர் ராஜேஷ்குமார், பேரூராட்சி செயல் அலுவலர் P.சதீஷ், மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர் ஊத்துக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட ஊராட்சி கிராமங்க சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர் பயணடைந்தனர் மேலும் நிலுவையில் உள்ள மனுக்களுக்கு விரைந்து தீர்வுகண்டு அறிக்கை சமர்பிக்குமாறு மாவட்ட ஆட்சியர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியது குறிப்பிடதக்கது.



# ஆற்காட்டில் தவெக நிர்வாகி பிறந்தநாள் முன்னிட்டு அன்னதானம்

ராணிப்பேட்டை ஜூன்.13-

ஆற்காட்டில் தவெக நிர்வாகி வி ஆர் எம் கார்த்திக் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அன்னதானம். ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தொழிலதிபரும் தவெக நிர்வாகியுமான வி ஆர் எம் கார்த்திக் 45 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆற்காடு அண்ணா சிலை அருகாமையில் சுமார் 1000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக தவெக நகர செயலாளர் வினோத் கலந்து கொண்டு அன்னதானத்தை துவக்கி வைத்து சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து பல்வேறு மருத்துவமனைகளில் அன்னதானம் வழங்கினார் இதில் தவெக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில், தொழிலாளர் நலத்துறை சார்பாக, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு, குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன், துணை ஆட்சியர் (பயிற்சி)சாய் சைதன்யா ஜாதவ், தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர்கள் ராஜசேகரன் (அமலாக்கம்), மாதேஸ்வரன் (சமூக பாதுகாப்பு திட்டம்),தாசரதி (சமரசம்) உள்ளிட்ட பலர் உள்ளனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161